# வரலாற்றில் பிரவேசியுங்கள்

உடுவில் தொகுதி வாக்காளரிடம்
சமர்ப்பிக்கப்படும் தமிழ்ப்பேசும் மக்களுக்கான
ஓர் அழைப்பு

ஆக்கியோன்:
வி. காராளசிங்கம்
பரிஸ்ரர்
உயர்நீதிமன்ற நியாயதுரந்தரர்
(உடுவில் தொகுதி இலங்கை சமசமாஜக் கட்சி அபேட்சகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்கள், கமக்காரர்கள்,
நாளாந்த தொழிலாளர்கள், விவசாயிகள்,
கிராமப்புற ஏழைமக்கள்,
கிராமப்புற தொழிலாளர்கள் எல்லோருக்கும்!
எழுதுவினைஞர்கள், விஞ்ஞானப் பணியளர்கள்,
ஆசிரியர்கள், சிறிய வியாபாரிகள், சிற்பிகள்,
இல்லத்தரசிகள் எல்லோர்களுக்கும், தாய்மார்கள்
மாணவர்கள், வாலிபர்கள்,
வேலையற்ற வாலிபர்கள், தொழிலாளர்கள்
உடுவில் தொகுதி வாக்காளர்கள் எல்லோருக்கும்!
எல்லா இடங்களிலுமுள்ள தமிழ்பேசும் மக்களுக்கும்!
தோழர்களே! நண்பர்களே!

இலங்கை சமசமாஜக் கட்சி தனது உயர்ந்த நிறுவனமான அரசியல் குழுவின் உறுப்பினர் ஒருவரை உடுவில் தொகுதிக்கு கட்சியின் அபேட்சகராக நியமித்துள்ளது. அதற்கேற்ப, இத்தேர்தல் பிரிவின் வாக்காளர்களாகிய உங்கள் முன்னிலையில் நான் அபேட்சகனாக முன்வந்துள்ளேன். காங்கேசந்துறைத் தொகுதியில் முன்பு இரு தடவைகளில் போட்டியிட்டு வெற்றி பெறாத பொழுதிலும், பாராளுமன்றம் செல்வதற்கான ஆதரவை உங்களிடம் நாடுவது இதுதான் முதற் தடவையாகும். இவ்வாறு உங்கள் ஆதரவை நான் நாடுவதால் எனது அரசியல் குணநலத்தைப்பற்றி ஆராய உங்களுக்கு உரிமை உண்டு. 1970 ஆம் வருட பாராளுமன்றப் பொதுத்தேர்தலிலுள்ள பிரதான பிரச்சினையை உங்களின் ஆலோசனைக்கு எடுத்துக் கூற இச்சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்துகிறேன். இப்பிரச்சினை நாடு முழுவதற்குமான பிரச்சினை மட்டுமல்ல; தமிழ் பேசும் மக்கள் முன்னிலையிலுள்ள விசேஷ பிரச்சினையான, அவர்களின் சனநாயக உரிமைகள் பற்றிய பிரச்சினையின் உரைகல்லாகும்.

## நலவுரிமைகளின் மோதுதல்

வளர்ந்தோர் வாக்குரிமையில் நடைபெறும் ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் ஓர் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பது என்ற பிரதான விடயத்தில் ஏதாவது ஓர் உருவத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்காளர்கள் பங்குபற்ற அழைக்கப்படுகின்றனர். தன்னை ஆதரிக்கும் பகுதியினரின் நலவுரிமையை முன்னிட்டு அரசின் பிரமாண்டமான சக்தியை வழிப்படுத்தும், பிரயோகிக்கும் அல்லது தேவையேற்படின் திருத்தி அமைக்கும் குழுவினர் தான் அரசாங்கம் ஆகும். இது உங்களை உடனடியாகவும் நேரடியாகவும் பாதிக்கும் விடயமாகும். எனவே, உங்களுடைய நலவுரிமைகளை முன்னேற்றக் கூடியதும் உங்களுடைய நெருக்கதல்களுக்கு செவிசாய்க்கக் கூடியதுமான ஓர் அரசாங்கத்தை தேர்ந்தெடுப்பது உங்களுக்கு நன்மையைப் பயக்கும்; குறிப்பாக வாக்காளர் எல்லோருடைய நலவுரிமைகளும் ஒரே மாதிரியானவை அல்ல என்பது கவனிக்கப்பட வேண்டும்.

பெரிய தேயிலை, இறப்பர் தோட்ட முதலாளிகள், பயிரிடக் கூடியதும் நீர் பாய்ச்சக் கூடியதுமான பல ஏக்கர் நிலங்களை வைத்திருக்கும் பணக்கார நிலப்பிரபுக்கள், புதிய கைத்தொழில் அதிபர்கள், வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் உள்நாட்டு ஏசென்டுகள், நிருவகிக்கும், ஏசென்சி நிலையங்களின் இயக்குனர்கள், இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகர்கள், சுருங்கச் சொன்னால் இலாபம், பங்குமுதல் இலாபம், வட்டி, வாடகை ஆகியவற்றை மட்டும் கொண்டு வாழ்வோரின் நலவுரிமைகளும் தொழிலாளர்கள், நாளாந்த கூலி வேலை செய்வோர், விவசாயிகள், எழுதுவினைஞர்கள், தொழில் நுட்ப வல்லுனர், வேதனம் பெறும் ஊழியர்கள், படித்துத் தொழில் புரிவோர், அதாவது தனியார் அல்லது பொதுத்துறை முதலாளிகளின் கீழ் தமது உழைப்புச் சக்தியை விற்று வாழ்பவர்கள் ஆகியோரின் நலவுரிமைகளும ஒரே மாதிரியானவை எனப் பாசாங்கு செய்வது பயனற்றதாகும். உண்மையில் இந்த நலவுரிமைகள் கடுரமான முரண்பாடு உடையவையாகும்.

உழைப்பு மட்டுமே செல்வத்தை உற்பத்தி செய்கின்றது. உழைக்கும் மக்களின் சம்பளங்களையும் வேதனங்களையும் குறைத்துக் கொடுப்பதன் மூலமே முதலாளிகள் இலாபங்களையும் பங்குமூலம் வருவாய்களையும் பெறக்கூடியதாக இருக்கின்றது. மேலதிகமாகப் பெருமளவில் கிடைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் உழையாத வருமானத்தின் பெரும்பகுதி லண்டன் நகரிலுள்ள முதலீடு செய்யும் முதலாளிகளிடம் செல்வதால், இந்தப் புல்லுருவிப் பகுதியின் உலக ஏகாதிபத்தியம் தனது முழுச் சக்தியுடனும் ஆதரிக்கின்றது. இலங்கை சமூகத்தின் பெரிய பிளவு இங்கே காணப்படுகிறது-தோட்ட, தொழிற்சாலை முதலாளிகள் ஒரு சிலர், வெளிநாட்டுச் செலவாணிப் பதுக்கல்காரர், உல்லாசப் பிரயாணிகளின் தரகர்கள், இரத்தினக் கற்களை களவாகக் கடத்துவோர், கொள்ளை இலாபம் அடிப்பவர்கள் ஆகியோர் ஒரு புறம்; இம்மோசடிக்காரர்களால் நாள் பூராவும் ஈவிரக்கமின்றி சுரண்டப்படும் மிகவும் பெருந்தொகையான உழைப்பாளிகள் மறுபுறம் இந்த உழைப்பாளிகளின் நலவுரிமைகளுக்கு எதிரான சூழ்ச்சிகளுக்கு இவர்கள் இலகுவாக இரையாவதுடன் தயங்காது பலியாகவும் போகக்கூடிய நிலைமையில் இவர்களை இம்மோசடிக்காரர் வைத்திருக்கின்றனர்.

மிகவும் ஆழமாகச் செல்லும் நலவுரிமைகளின் மோதுதல் முற்றிலும் எதிரிடையான இரு அரசியல் இயக்கங்களாக உருவெடுப்பது அவசியமாகின்றது. ஒவ்வொரு அரசியல் இயக்கமும் தான் பிரதிநிதித்துவம் வகிக்கும் நலவுரிமைகளை முன்னேற்றுவதற்கு அரசின் இயந்திரத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயல்கின்றது. சிறீலங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை சமசமாசக்கட்சி, கம்யூனிஸ்ற் கட்சி ஆகியவற்றைக் கொண்ட ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அதனுடைய உபகோள்களான சமஷ்டிக் கட்சி, தமிழ் காங்கிரஸ், ஜாதிக விமுக்தி பெரமுன, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் கூட்டணிக்கும் இடையே தேர்தலில் ஆதிக்கம் பெறுவதற்கான போராட்டம் நடைபெறுகிறது. தொழிலாளர், விவசாயிகள், படித்தவர்கள், பொதுவாக "சிறிய" மனிதன் என அழைக்கப்படுபவர் ஆகியோரின் இயக்கத்தைப் பிரதிபலிக்க சி. ல. சு. க. - இ. ச. ச. க. - க. க ஐக்கிய முன்னணி முனைகிறது. அன்னிய ஏகாதிபத்தியத்தினதும் அதனின் உள்நாட்டு தொடர்புகளினதும் நலவுரிமைகளை யூ. என். பி. கூட்டணி பிரதானமாகப் பிரதிபலிக்கின்றது. உலக ஏகாதிபத்தியத்திற்கும் தேசிய விடுதலை இயக்கத்திற்கும் இடையே உள்ள முரண்பாட்டையே இங்குள்ள போட்டியும் பிரதிபலிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1938-** பாடசாலையில் இருக்கும் பொழுது முதன் முதலாக அரசியல் பத்திரிகை எழுத்தாளர் துறையில் முதலாவது பிரவேசம்


# Ceylon Observer

LARGEST EVENING NET SALE IN CEYLON

FRIDAY EVENING APRIL [illegible]


### *Tamil "Gandhi"*

TO call Mr. Ponnambalam, the self appointed leader of the Tamils, a "Gandhi", is ridiculous.

I am at a loss to understand the reasons that prompted Mr. S. Rajadurai, to place Mr. Ponnambalam on the same pedestal as the Mahatma Gandhi. We all know that the political ideologies of these two, are diametrically opposite. What sacrifices has Mr. Ponnambalam made for the public good? The life of Gandhiji is entirely one of self-sacrifice.

Did that saintly Indian politician ever lead a minority deputation to the Viceregal palace?

Mr. Ponnambalam does not follow any of the political principles enunciated by Mahatmaji, namely, non co-operation etc. Did Mr. Ponnambalam ever dream of opening the Hindu temples in his constituency to those of the so-called lower castes? It is only a height of ignorance to call this pillar of imperialism a "Gandhi".

Mr. Rajadurai writes of an invitation to Mr. Ponnambalam by the Secretary of the Colonies to discuss reforms. Was it not Mr. Ponnambalam who wanted an interview?

Mr. Ponnambalam is the leader of the few Tamil communalists, but not of the Tamils. An interview with the Secretary for the Colonies does not make a leader.

**V. KARALASINGHAM**

Kalutara, Sept. 10, 1938

ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அரசியலைக் கண்டித்தது.

—"சிலோன் ஒப்சேர்வரி"லிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகப் போராட்டத்தின் அங்கம்

இங்கு நடைபெறுவது தனித்த ஒரு போராட்டமல்ல; இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள ஒரு கோளாறுமல்ல. "படித்த" பொதுசன அபிப்பிராயத்தை உற்பத்தி செய்பவர்களான இலங்கையின் ஆங்கில மொழிப் பத்திரிகைகள் இது ஒரு கோளாறு என பலரை கருத வைத்துள்ளன. மறுபுறம், சி.ல.சு.க. - இ.ச.ச.க. - க.க. ஐக்கிய முன்னணிச் சக்திகளுக்கும் யூ. ன். பி. க்கும் அதனுடைய கூட்டாளிகளுக்கும் இடையே நடைபெறும் போராட்டம் சர்வதேச போராட்டததின் ஓர் அங்கமாகும். உத்தியோக தோரணையில் மூன்றாவது உலகம் என அழைக்கப்படும் பின்தங்கிய குடியேற்ற, அரைக்குடியேற்ற நாடுகள் எல்லாவற்றிலும் இதே சக்திகள் அணிதிரண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. போராட்ட உருவங்களும் போராட்டத்தின் ஆழமும் உக்கிரமும் இடத்துக்கிடம் வேறுபடுகின்றன. வியற்நாமிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் ஐந்தாம் படை அரசாங்கத்தை அமெரிக்க ஆயுதமும் படைகளும் தாங்கிநிற்க பகிரங்கமான, இரத்தக்களரி நிறைந்த கொடூரமான உள் நாட்டுப் போர் நடைபெறுகின்றது. லத்தின் அமெரிக்காவிலுள்ள மலைகளிலும், காடுகளிலும் நகரங்களிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திறகும் அதனுடைய கூட்டாளிகளுக்கும் எதிராக இடைவிடாத ஒரு கொறில்லாப் போர் நடைபெறுகின்றது; கறுப்பர்கள் வாழும் தன்சேனியா சாம்பியா போன்ற நாடுகளிலும் வட ஆபிரிக்காவிலுள்ள லிபியா, அல்ஜீரியா ஆகிய நாடுகளிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் அரசின் அதிகாரம் என்னும் கருவியை ஏகாதிபத்திய சொத்துக்களைப் பறிமுதல் செய்யப் பயன்படுகின்றது. அண்மையிலுள்ள இந்தியாவில், வெளிநாட்டு ஏகாதிபத்தியத்தின் ஆதரவு பெற்ற சுதேச சக்திகளுக்கும் அதனுடைய பொருளாதாரப் பிடியிலிருந்து வெளியேற முனையும் சக்திகளுக்கும் இடையேயான போராட்டம் ஆளும் காங்கிரஸ் கட்சிக்குள் ஒரு போராட்டமாக வெடித்தது. ஒரு புறம் திருமதி இந்திரா காந்தியும் மறுபுறம் மொராஜி தேசாயும் தமது நாட்டிலுள்ள அரசியல் சமூக நிறுவனங்களில் இன்று போராடி வருகின்றனர். ஏகாதிபத்திய சக்திகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுக்கு எதிரான சக்திகளுக்கும் இடையே பாராளுமன்ற அமைப்பினுள் எவ்விதத்திலும் முக்கியத்துவத்தில் குறையாத போராட்டம் இலங்கையில் நடைபெறுகிறது.

உலக ஏகாதிபத்தியத்தினால் ஆதரிக்கப்படும் முகாமிற்கும் ஏகாதிபததியத்தை எதிர்க்கும் முகாமிற்கும் இடையே நடைபெறும் சர்வதேசியப் போராட்டம் ஒரு ஜீவமரணப் போராட்டமாகும். குடியேற்ற நாட்டு சமூக அமைப்பினுள் உள்ள மற்றைய எல்லா முரண்பாடுகளேயும் தாண்டிய போராட்டம் தான் இந்தப் போராட்டம்.

மூன்ருவது உலகத்திலுள்ள நாடுகளின் மீது தனது மரணப் பிடியை ஏகாதிபத்தியம் தளர்த்தமாட்டாது. ஏகாதிபத்தியத்திற்கு இந்நாடுகள் அவலமாகத் தேவைப்படுகின்றன. சோம்பல் மனத்தினரும் ஏகாதிபத்தியத்தின் உணர்வுடைய கைக்கூலிகளும் இக்கூற்றை மாக்சியவாதிகளின் "சுலோகம்" என நிராகரிப்பர். ஆனல் சுதந்திர நாடுகள் என அழைக்கப்படும் ஏகாதிபத்தியத்தின் முன்னேய குடியேற்ற நாடுகளே ஏகாதிபத்தியம் எவ்வாறு ஈவிரக்கமின்றி சுரண்டுகின்றது என்பதை புதுடில்லியில் நடைபெற்ற இரண்டாவது ஐக்கிய நாடுகளின் வர்த்தகம், அபிவிருத்தி பற்றி மகாநாட்டிற்கு ஐக்கிய நாடுகளின் பொதுக் காரியதரிசி சமர்ப்பித்த அறிக்கை புலப்படுத்துகின்றது. மூன்ருவது உலகத்தைச் சார்ந்த ஏற்றுமதி செய்யும் கைத்தொழில் மூலப் பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைதல், மேலைத்தேச தொழில்மயமான நாடுகளால் குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பப்படும் உற்பத்திப் பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக உயருதல், கப்பற் சேவை, காப்புறுதி, வங்கி, தொழில் நுட்ப அறிவு, புதிய கண்டுபிடிப்புகள் முதலியவற்றிற்குமான சேவைகளுக்கு மேலைத் தேச ஏகாதிபத்தியம் அறவிடும் உயர்ந்த ஏகபோக விலைகள். இவை எல்லாவற்றினதும் தொகுத்த விளைவுகள் நாசத்தை ஏற்படுத்துவனவாகும். எனவேதான், ஏகாதிபத்தியம் செயற்கையான முறையில் சக்தியளிக்க முனைகிறது; கடனும் "உதவியும்" வழங்குவதற்கான நிறுவனங்கள் தோன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1942 ஏப்ரல் 8-ந் திகதி இவரை கைது செய்து தடுப்புக் காவலில் வைக்க இலங்கையின் மாட்சிமை தங்கிய தேசாதிபதி கட்டளை பிறப்பித்தார்.

1942 ஏப்ரல் 24-ந் திகதி இவரை தலைமறைவாகத் திரிபவர் என கொழும்பு நீதிபதி பிரகடனம் செய்தார்.

# Sama Samajists Proclaimed

## ATTACHMENT ORDER ON PROPERTY

TWELVE members of the defunct Lanka Sama Samaj Party, including Mr. Leslie Goonewardene, of "Westland House," Panadura, his wife, Mrs. Vivian Goonewardene, Mrs. Selina Perera, wife of Mr. N. M. Perera, Mrs. D. P. R. Gunewardene, Messrs. Robert Goonewardene of Boralugoda and Reginald Senanayake of 32nd Lane, Bagatalle Road, Colombo, against whom warrants had been issued on a detention order issued by H E. the Governor, and who are now said to be in concealment," were proclaimed by Mr. Achan Pereira, the acting Colombo Magistrate.

The other persons proclaimed were: Messrs. Reggie A. Perera, of Karawanella, V. Karalasingham of Jaffna, P. H William de Silva of Batapola, Ambalangoda, S. C C. Anthony Pillai of Jaffna, Lionel D. Cooray of Moratuwa and K V Lourensz M Perera of Kalubowila.

The Magistrate also ordered the attachment of the properties both movable and immovable belonging to all these persons.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளன. ஆனால் இவை எல்லாம் மூன்றாம் உலகத்தை அதனைச் சுரண்டும் நாடுகளுடன் பிணைப்பதற்கே உதவுகின்றன. ஏகாதிபத்தியத்தின் வலது குழலான "இக்கொனோமிஸ்ற்" சஞ்சிகையின்படி, லத்தின் அமெரிக்கா பெறும் கடனில் 87% பழைய கடன்களைக் கொடுப்பதற்காக உபயோகிக்கப்படுகின்றது; அதாவது வட்டி செலுத்துவதற்கும் மூலதனத்தை திருப்பிக் கொடுப்பதற்கும் உபயோகிக்கப்படுகின்றது. இதே போலத்தான் இலங்கை பெறும் கடனிலும் 40% செலவழிக்கப்படுகின்றது. அதே நேரம் "பெருமளவில் கடன் பெறுங்கள்" என்ற விலைமதிப்பற்ற ஆலோசனையை இலங்கைக்கு வழங்குகின்றனர். இதனின் நோக்கம் என்னவென்றால் சர்வதேச பணச் சந்தையின் பண மூட்டைகளில் இலங்கையை முற்றாகத் தங்கியிருக்க வைப்பதாகும்.

ஆனால், இலங்கை உட்பட குடியேற்ற நாடுகள் சமது பின்தங்கிய நிலையிலிருந்து மீள வேண்டுமானால், ஏகாதிபத்திய அமைப்பிலிருந்து பிரிய வேண்டியது அவசியமாகும், ஏகாதிபத்தியம் இன்று கொண்டு செல்கின்ற மேலதிகச் செல்வம் திட்டமிடப்பட்ட அபிவிருத்திக்கு தேவையாகும். உத்தியோக பூர்வமான புள்ளி விபரங்களில், இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் வருடாந்த இலாபம் எவ்வளவு என்பது வெளியிடப் படுவதில்லை—அத்தொகை மிகவும் பெரிதாகும்! ஆனால் அத்தொகை 100 கோடி ரூபாவுக்கு மேற்பட்டதென மதிக்கப்பட்டுள்ளது. தனியார் மூலதனம் வீணாக விரயம் செய்யும் மேலதிகச் செல்வம் புதிய முதலீடு செய்யப்படுவதற்கு நாட்டிற்கு தேவைப்படுகின்றது. தனிப்பட்ட கொள்ளை இலாபம் அடிப்பவர்களும் கள்ளக்கடத்தல் செய்பவர்களும் சூறையாடும் கோடிக்கணக்கான ரூபாய்கள் புதிய முதலீட்டிற்கு நாட்டிற்கு தேவைப்படுகின்றது. உதாரணமாக இரத்தினக்கல் வியாபாரத்தை எடுப்போம்—ஹொங் கொங், சிங்கப்பூர், நியூயோக் ஆகிய இடங்களுக்கு ஏற்றுமதியாகும் இரத்தினக் கற்கள் பற்றிய புள்ளி விபரங்கள் அவ்விடங்களில் இறக்குமதி செய்யப்பட்டவை என பிரகடனப்படுத்தப்படும். புள்ளி விபரங்களின் ஒரு சிறு தொகையைத் தான் குறிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. இவை எல்லாம் புதிய தொழிற்சாலைகளுக்கும் புதிய இயந்திரங்களுக்கும் வேண்டிய பணத்தை இழப்பதாகும். இன்றைய பொருளாதாரத் தேக்கத்தை முடிவு கட்டுவதற்கு புதிய தொழிற்சாலைகள் தேவையாகும்; இந்தப் பொருளாதாரத் தேக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இனவாத, மதவாத நெருக்கடிகளும் போட்டிகளும் ஏற்படுகின்றன. வெளிநாட்டு மூலதனத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் யூ. என். பி. அரசாங்கம் இத்தகைய நடவடிக்கைகளை தடுக்கும் வலுவற்றதாகும்: ஓர் ஏகாதிபத்திய எதிர்ப்புத் திட்டத்திற்கு உறுதியாக விசுவாசம் கொண்டதும் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு உறுதிபூண்டதுமான ஓர் அரசாங்கததினால் மட்டுமே இப்பணியை ஆற்ற முடியும்.

## பிற்போக்கு முகாமில் தமிழ்த் தலைமை

சரித்திர முக்கியத்துவம் பெற்ற இப்போராட்டத்தில் வட மாகாண மக்களின் நிலை என்ன? இந்தியாவில் பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராக மகாத்மா காந்தி நடாத்திய ஆரம்ப போராட்டத்தின் விளைவாக திரு. கண்டி பேரின்பநாயகத்தின் வாலிபர் காங்கிரசில் அமைவான தமிழர் அபிப்பிராயத்தில் ஒரு முக்கியமான பகுதி தமிழரின் எதிர்காலம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்துடன் இணைந்திருக்கிறது என்பதை அங்கீகரித்தது உண்மையாகும். ஆனால் 34 ஆண்டுகளின் முன்பு, இவ்வியக்கத்தை தமிழ் பிற்போக்கு வாதிகள் தோற்கடித்தனர்; தமிழரின் இன உணர்வுகளை சிழ்த்தரமான முறையில் தட்டியெழுப்பி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தனது வெட்ககரமான அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார். தமிழ் மக்களின் பிரதான எதிரி பிரித்தானிய ஏகாதிபத்தியம் அல்ல, சிங்கள மக்கள் தாம் என அவர் எடுத்துக்காட்டினார். இதன் மூலம் 1935 ஆம் ஆண்டு நாடு முழுவதினதும் குறிக்கோள் ஏகாதிபத்திய எதிர்ப்பு என இலங்கை சமசமாஜக் கட்சி முன்வைத்த நோக்கத்திலிருந்து தமிழ் மக்களை திசை திருப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1943—44 கல்கத்தாவில் ஒரு சட்ட விரோத பத்திரிகையை பதிப்பித்தார்.**

...Permanent ...olution, in ... sense which ... attached ... the concep... means a ...lution which ...ies no com...mise with any ...n of class rule, which does not stop at ... democratic stage, which goes over to ...list measures and to war against the ...tion from without, that is a revolution ...se every next stage is anchored in the ...eding one and which can only end in ... complete liquidation of all class ...ty. ......a national revolution is not ...-sufficient whole; it is only a link ...the international chain. The interna...l revolution presents a permanent ...m, in spite of all fleeting rises and

—*Trotsky*

# PERMANENT REVOLUTION

( INCORPORATING THE "BOLSHEVIK-LENINIST" )

VOL 2 JANUARY—MARCH 1944 No 1



...le always were and always will be the stupid victims of deceit and ...deceit in politics until they learn to discover the interests of some ... behind all moral, religious, political and social phrases, declara...s and promises... The Asiatic revolutions have revealed the same ...lessness and baseness of liberalism, the same exceptional import... of the independence of the democratic masses, and the same sharp ... division between the proletariat and the bourgeoisie of all kinds. ... the experience both of Europe and Asia, whoever now speaks of ...class politics and of non-class socialism simply deserves to be put ...cage and exhibited alongside of the Australian kangaroo

—LENIN *March, 1913*

*FEATURING IN THIS ISSUE*

Articles by Leon Trotsky D Dutt. S Livera and Krishna Menon.

British Bolshevik-Leninist's Interview with Leon Trotsky

Editorial Notes on

Britain at the Cross Roads.
The Russian Offensive.
A Blue Print for Capitulation
The Stalinist-Police Alliance—the summit of Popular Frontism.

*ORGAN OF THE BOLSHEVIK-LENINIST PARTY OF INDIA & CEYLON SECTION OF THE FOURTH INTERNATIONAL*

**EIGHT ANNAS**

ஓர் இதழின் அட்டையின் பதிப்பு
(அளவு குறைக்கப் பட்டது)

**மகாத்மா காந்தியின் "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தை ஆதரித்து"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய ஏகாதிபத்திய அதிகார சூரியனின் ஒளியில் பிரகாசித்த திரு. பொன்னம்பலம் பகிரங்கமான ஒரு வகுப்புவாதக் கொள்கைத் திட்டத்தைக் கொண்டு யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசுக்கு எதிராக குறைவான, இழிவான வெற்றி பெற்றார். தனது பரந்த இந்திய அனுபவத்திலிருந்து ஜவகர்லால் நேரு சுட்டிக்காட்டியது போல, இனவாதிகள், என்னதான் சொன்னபோதிலும், கலப்பற்ற பிற்போக்குவாதிகள் ஆவர். தமிழ்ப்பேசும் மக்களின் பெயரில் குரல் கொடுத்த திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அவரின் வகுப்புவாதக் கூட்டமும் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்திற்கு எதிராக பிரித்தானிய தேசாதிபதி எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையையும் பழைய அரசாங்க சபையில் ஆதரித்துப் பேசினார்; மற்றைய தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்கள் கோரிய அரசியல் சீர்திருத்தங்களைத் தடைசெய்வதற்காக மிகவும் வெளிப்படையான விழல்தரமான கோரிக்கைகளை முன்வைத்தார்.

ஆனால் சாறு பிழியப்பட்ட சக்கைகள் ஏகாதிபத்தியத்திற்கு தேவையில்லை. அதனுடைய தேவையை திரு. பொன்னம்பலம் பூர்த்தி செய்த பின்பு, அவரை அமைதியாகக் கைவிட்டது. சோல்பரி அரசியல் திட்டத்தில் திரு. டி. எஸ். சேனநாயக்காவுடனும் அவருடைய சிருஷ்டியான ஐக்கிய தேசியக் கட்சியுடனும் பிரித்தானிய ஏகாதிபத்தியம் உடன்பாட்டிற்கு வந்தது அதன் பின்பு, 1947 பொதுத்தேர்தலில் டி. எஸ். சேனநாயக்காவின் சிங்கள வகுப்பு வாதத்தை தனது சொந்தத் தினிசான தமிழ் வகுப்புவாதத்தின் மூலம் போராடுவதாக திரு. பொன்னம்பலம் உறுதியளித்தார். ஆனால் விரைவில் 1948இல் ஐக்கிய தேசியக் கட்சியிடம் சரணாகதி அடைந்தார். இதிலிருந்து சமஷ்டிக் கட்சி தோன்றியது; ஐக்கிய தேசியக் கட்சியில் அமைவுபெற்ற சிங்கள வகுப்புவாதத்தை தான் எதிர்த்துப் போராடுவதாக வாக்குறுதி அளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1945 பம்பாயில் கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்டார்.*

# CEYLON TROTSKYIST ARRESTED

The **"Free Press"** of March 19th, reports from Bombay that **Carol Singam,** a Cylonose, was arrested by the Bombay C.I.D. under the Defence of India rules.

**"When they searched his house it is alleged that they found objectionable literature. He is alleged to be a member of the Trotskyist Party."**

Thus in spite of the conditional release of our comrades in Ceylon, the persecution of Bolshevik-Leninists in India goes on unabated.

"சோஷலிஸ்ற் அப்பீல் (லண்டன்)
இல்' இருந்து மே. 1945
உதவுபவர் : கென் ராபக்
சாம் போன்ஸ்ரின்
(லண்டன்)

இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டு பின்பு இலங்கையில் பதுளையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

---

ஆனால், தமிழ் காங்கிரசின் வகுப்புவாதத்தை இன்னும் தீவிரமாகப் பரப்பியது மட்டுமல்லாது, 1956இல் தமிழ்க் காங்கிரசை வீழ்த்திய சமஷ்டிக் கட்சி பிற்போக்கான தமிழ் காங்கிரசின் அரசியல் பாரம்பரியத்தை தொடர்ந்து கடைப்பிடித்தது. சாம்ராஜ்யத்தில் "சூரியன் அஸ்தமிக்காத" நாட்களில் பிரித்தானிய ஏகாதிபத்திய அதிகாரத்தை திரு. பொன்னம்பலம் ஆதரித்தார்; ஆனால், கலகம் செய்யும் குடியேற்ற நாட்டு மக்கள் சகல பக்கங்களாலும் சாம்ராஜ்யத்தை தகர்க்கும் காலத்தில் சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்க திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் சமஷ்டிக் கட்சியும் முன்வந்தனர். திருகோணமலையிலும் கட்டுநாயக்காவிலும் பிரித்தானிய தளங்கள் கலைக்கப்படுவதை சமஷ்டிக் கட்சி எதிர்த்தது. இலங்கையிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை பிரித்தானிய காப்புறுதிக் கம்பனிகள் வாரிக்கொண்டு செல்லும் உரிமையை அவர்கள் ஆதரித்து காப்புறுதி தேசவுடைமையாக்கப்படுவதை எதிர்த்தனர்; இலங்கைப் பாவனையாளரைச் சுரண்டித் "தமது பிடியில் வைத்திருப்பதற்கு ஷெல், கால்ரெக்ஸ் போன்ற அன்னிய எண்ணெய் ஏகபோக உரிமையாளருக்கு மாற்ற முடியாத உரிமை உண்டென நினைத்து எண்ணெய் விநியோகம் தேசவுடைமையாவதை எதிர்த்தனர் - ஆனால் இதன் மூலம்தான் பின்பு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிலும் பெற்றோலிய–ரசாயனத் தொழிலும் ஏற்பட்டன. நெற்காணிச் சட்டத்தை எதிர்த்தனர். பொதுக்கல்வியில் தனிப்பட்டவர்களின் சொந்த நலவுரிமைகளை ஆதரித்தனர். வகுப்புவாதிகள் பிற்போக்குவாதிகள் என ஜவகர்லால் நேரு எச்சரித்தது வீணுக்காக அல்ல.

எனவே, யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வந்த 34 வருட கால தமிழ் வகுப்புவாத அரசியலின் பொழுது ஒவ்வொரு பிரதான பிரச்சினையிலும் யாழ்ப்பாணத்தின் அரசியல் தலைமை பிற்போக்கு முகாமில் காணப்பட்டது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில், பிற்போக்கு முகாம் எதுவாயிருந்தாலென்ன எங்கிருந்தாலென்ன அதன் முன்னணியில் தமிழ் அரசியல் தலைமை நின்றது—மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்ட ஆக்கமன்றத்திற்கு எதிராக பிரித்தானிய தேசாதிபதியை ஆதரித்தது; 1948—1956 காலப்பகுதியில் மக்கள் இயக்கத்துக்கு எதிராக டி. எஸ். சேனநாயக்காவுடனும் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் கைகோர்த்து நின்றது. 1956—1965 காலப்பகுதியில் பெரிய ஏகாதிபத்திய, முதலாளித்துவ சொத்துக்களை தேசவுடைமையாக்குவதையும் சீர்திருத்தங்களை ஏற்படுத்தும் சட்ட ஆக்க நடவடிக்கைகளையும் எதிர்த்துக் குரலெழுப்பியது; 1964 இல் கூட்டரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு பெரிய சுதேச சொத்துடைமையாளர்களுடனும் அன்னிய ஏகாதிபத்திய நலவுரிமைகளுடனும் சதி செய்தது; இறுதியில் 1965 இல், இலங்கையில் ஏகாதிபத்திய சொத்துடைமையின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதை பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாகக் கொண்டதால் மக்களின் நலவுரிமைக்கு எதிராக உள்ள ஓர் அரசாங்கததில் மேற்குறிப்பிட்ட சக்திகளை அருவருக்கத்தக்க முறையில் அரவணைத்தது.

முப்பது வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக அவமானம்! இவை எல்லாம் தமிழ் பேசும் மக்களின் பெயரில் நடைபெற்றுள்ளன. இந்த நீண்டகாலப் பகுதியில் எங்கள் பெயரில் செயலாற்றியவர்களின் செய்கைகள் பற்றி சிங்கள வகுப்புவாத சக்திகளிடமிருந்து தூரத்திலுள்ள சாதாரண கௌரவமான மக்கள் சந்தேகப் பார்வை பார்ப்பதில் என்ன ஆச்சரியம் உண்டு? பெருந்தொகையான மக்களின் நலவுரிமைகளுக்கு வெளிப்படையாகவே துரோக மிழைக்கும் தன்மையுடையனவாக நீண்ட காலமாக தமிழ் பேசும் மக்களின் ஆதரவு பெற்ற தலைமைப்பீடத்தின் செயல்கள் அமைந்துள்ள பொழுது, சில வேளைகளில் தமிழர்களுக்கு எதிராக தங்களுடைய மக்களை வகுப்புவாத சக்திகள் தூண்டக் கூடியதாக இருப்பது ஆச்சரியமான விடயமா? இந்த தேசிய அவமானத்தை ஏற்படுத்தியுள்ள கலப்பற்ற வரலாற்றிற்கு தமிழர்கள் எல்லோரும் பொறுப்பாளிகள் அல்லர். ஆனல், ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாமிலிருந்து தமிழர் அரசியல் தலைமையின் பிற்போக்கு நடவடிக்கையை கண்டித்தவர்கள், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஒரு பொழுதும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. தமிழ் காங்கிரசும் சமஷ்டிக் கட்சியும் பிரதிபலிக்கும் உத்தியோக பூர்வமான அரசியல் தலைமையின் பிற்போக்குத் தன்மையை இததவறு மேலும் துலாம்பரப்படுத்த உதவியுள்ளது.

## இந்த முகாமில் சனநாயக உரிமைகளைப் பெற முடியாது.

தமிழ் காங்கிரசினதும் சமஷ்டிக் கட்சியினதும் முதுசொம் என கூறப்படும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பற்றி பிரச்சினையின் நிலைதான் என்ன? இவ்வுரிமைகளைப் பாதுகாக்கவே தமிழ் வகுப்புவாதம் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. இவ்விரு கட்சிகளினதும் ஆதிக்கம் நிலவிய காலப்பகுதியில் தமிழ் பேசும் மக்களின் நிலைமை குன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1957 இங்கிலாந்தில் நியாயவாதியானர்



யமை அவற்றின் அரசியல் தோல்வி அடைந்ததற்கான இறுதியான, உறுதியான மறக்கமுடியாத அத்தாட்சியாகும். பெரும்பான்மைச் சமூகத்தின் வகுப்புவாதத்திற்கு சிறுபான்மையினரின் வகுப்புவாதம் ஒருநாளும் பரிகாரமாகாது; புதிய ஆபத்துக்கள் ஏற்படாது தடுக்க சாதாரணமான வெளிப்படையான இந்த உண்மையை இப்பொழுதே கற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ்பேசும் மக்கள் ஏதாவதொரு தமிழ் வகுப்புவாதக் கட்சியின் கீழ் எவ்வளவுதான் ஐக்கியப்பட்டிருந்தாலும் அவர்களின் நியாயமான சனநாயக உரிமைகளை தமிழ் வகுப்புவாதத்தினுல் பேணிப் பாதுகாக்க முடியாது என்பது வலுவான உண்மையாகும்; விரும்பத்தக்கதல்லவாக இருக்கலாம். ஐக்கியம் எப்பொழுதும் ஏற்பட்டுள்ளது. ஒரு வகுப்புவாதக் கட்சியின் கீழ் ஒவ்வொரு தரமும் புதிதாக தமிழர்கள் அணிதிரள, மேலும் ஒரு தாக்குதல் ஏற்பட்டதுடன் இருந்த உரிமைகளும் பறிக்கப்பட்டன. இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக, எப்பொழுதும் சிங்கள வகுப்புவாதத்திற்கு மேலும் சரணுகதியடைய நேரிட்டது. எனவே, 1948இல் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஐக்கிய தேசியக் கட்சியிடம் சரணுகதியடைந்தார். இந்தச் சரணுகதியை எதிர்த்துப் போரிடப் போவதாகச் சத்தியம் செய்த திரு. செல்வநாயகமும் தனது முறைவரும்பொழுது அதே ஸ்தாபனத்திடமும் அதனுடன் சேர்ந்த சக்திகளிடமும் சரணுகதி அடைந்தார்.

திரு. பொன்னம்பலத்தின் சரணுகதிக்கும் திரு. டட்லி சேனநாயக்காவுடன் திரு. செல்வநாயகம் செய்த உடன்படிக்கைக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், சிறுபான்மையோரின் உரிமைகள் பற்றித்தான் எவ்வளவு ஆழமான அக்கறை கொண்டிருக்கின்றது என்பதை ஐக்கிய தேசியக் கட்சி காட்டியது. பண்டாரநாயக்கா – செல்வநாயகம் உடன்படிக்கைக்கான எதிர்ப்பை அது உருவாக்கியது; அதாவது, 1958 இரத்த வெள்ளத்திற்கான மனப்பாங்கினை தயாரித்தது. இந்த ஆரம்பவேலை போதாதிருந்ததால், யூ. என். பி. யின் பத்திரிகை "சியரட்ட" 1958 மே மாதத்தில் தமிழர்களை கொலை செய்யுமாறு பகிரங்கமாகக் கூறியது. ஆனல் தனியாக ஒரு யூ. என். பி. அரசாங்கத்தில் சேராத பெருமை திரு. செல்வநாயகத்தை சார்ந்ததாகும். அவருடைய கட்சி ஒரு "தேசிய" அரசாங்கத்தில் சேர்ந்தது. — அதாவது திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் மந்திரி சபையின் "குற்றவாளிகள்" சேர்ந்து பலப்படுத்திய யூ. என். பி. அரசாங்கத்தில் சமஷ்டிக்கட்சி சேர்ந்தது. சி. பி. டி. சில்வா, டபிள்யூ. தகநாயக்கா போன்றவர்கள் மந்திரிசபையினுள்ளும் கே. எம். பி. ராஜரத்தின போன்றவர்கள் வெளியிலும் தமிழ் மக்களுக்கு சலுகைகள் வழங்குவதை நிலைமாறாது எதிர்த்து வந்தவர்களாவர். அத்தகைய பெயர் பெற்றவர்களுடன் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறேம் என கூறும் ஒரு கட்சி ஒரே அரசாங்கத்தில் சேருவதைவிட தாழ்வான செயல் வேறென்றிருக்க முடியுமா? ஆனல் ஏகாதிபத்திய முதலாளித்துவ நலவுரிமைகளைப் பாதுகாப்பதில் எந்த அவமரியாதையும் தாழ்வாக மாட்டாது! வகுப்புவாதிகள் பிற்போக்குவாதிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஜவகர்லால் நேருவின் கூற்றை ஞாபகப் படுத்திஞல் அத்தகைய ஓர் அரசாங்கத்தை சமஷ்டிக் கட்சி ஆதரித்தது பற்றி ஆச்சரியம் உண்டா?

எதிரியின் காலடியில் மண்டியிடுவது வகுப்புவாதத்தின் தவிர்க்க முடியாத தலைவிதியாகும். தனது வங்குரோட்டு நிலையை மூடி மறைப்பதற்கு சமஷ்டிக் கட்சி பிரதிநிதித்துவத்தில் ஏகபோக உரிமை கோருகின்றது; தமிழ் மக்களின் நன்மைக்

## 1962. தமிழர் பிரச்சனைபற்றி நூலின் ஆசிரியர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக மற்றைய கட்சிகளுடன் பேரம் பேச சுதந்திரம் கோருகின்றது. "பேரம் பேசுவதன் மூலம் கிடைப்பவை" பயனற்றவை என்பது இப்பொழுது எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும் — அவற்றை எந்த அரசாங்கமும் நிறைவேற்றமாட்டாது; அவை நிறைவேற்றப்படுவதை எதிர்க்கட்சி அனுமதிக்கமாட்டாது. அதன்பின்பு சிங்கள கட்சிகள் நியாயமற்றவை என சமஷ்டிக் கட்சி ஒப்பாரி வைக்கின்றது, ஆனால் சூழ்ச்சியும் மிரட்டுதலும் நிறைந்த தலைமறைவான உலகில், வாக்குறுதிகள் எப்பொழுதும் காற்றில் விடப்படுகின்றன என்பதை தமிழ் பேசும் மக்களுக்கு அவர்கள் சொல்வதில்லை. இதே போன்ற முறைகள் கையாளப்பட்டால் அரசியல் உலகிலும் அதே விளைவுதான் ஏற்படும். தமிழ் மக்கள் இன்னும் உணராதது என்னவென்றால் தமிழ் காங்கிரஸ், சமஷ்டிக் கட்சி ஆகிய இரு கட்சிகளுக்கும் இது ஒரு வழிதான் உண்டு என்பதாகும். மிரட்டல் அடிப்படையில் ஓர் இனம் அல்லது மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற்று சமமானவர்களாக வாழ முடியுமா? ஒரு நாளும் முடியாது. எந்த அரசாங்கத்திடமிருந்து மிகவும் குறைவான ஒரு சிறிய சலுகையும் பெறுவது ஏறக்குறைய இயலாததாகும்; கஷ்டப்பட்டுப் பெறவேண்டியதாகும்.

தமிழ்பேசும் மக்களின் நியாயமான ஜனநாயகக் கோரிக்கைகளுக்கான போராட்டம் முழுவதையும் நீண்ட கால ஆதிக்கம் செலுத்திய தமிழ் காங்கிரசும் சமஷ்டிக் கட்சியும் கேவலமாக்கி, உண்மையான கூட்டாளிகளின் அனுதாபத்தை இழந்துள்ளன. மேலும் சரித்திர ரீதியாக ஒரு நியாயமான இயக்கத்தைப் பகிடிக்கும் வெறுப்புக்கு ஆளாக்கியதுடன் தமிழ்பேசும் மக்களை நாடு பார்த்து சிரிக்கும் நிலைக்கு கொண்டு வந்துள்ளனர். எனவேதான், அவர்கள் யாழ்ப்பாணத்தில் மகாராசாக்கள் போலக் காட்சியளித்துவிட்டு கொழும்பில் பிச்சைக்காரர்போல இரந்து நிற்கின்றனர்.

## எமது இடம் ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாமிலாகும்.

இந்நிலைதான் எமது தலைவிதியா? இல்லை; ஆயிரம் முறை "இல்லை"! எமது பங்கை நாம் பெற, வரலாறு வகுத்த பணியை நாம் நிறைவேற்ற முதலில் நாம் ஒன்று செய்ய வேண்டும். தமிழ்க் காங்கிரசும் பின்பு சமஷ்டிக் கட்சியும் எம்மை இட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றதன் விளைவாக நாம் ஏகாதிபத்தியம், பிற்போக்கு, யூ. என். பி. அதனுடைய சகாக்கள் ஆகியவற்றின் கைப்பொம்மைகளாக இருந்த நிலையிலிருந்து வெளியே வரவேண்டும். இந்தச் சக்திகளை எதிர்த்துப் போராடும் முகாத்திற்குள் செல்ல வேண்டும். அங்கு முன்னேற்றமடைந்து சிங்களத் தொழிலாளர்கள், விவசாயிகள், புரட்சிகர சோஷலிசவாதிகள் ஆகியோரின் சிறந்த சக்திகளுடன் சேர்ந்து அப்போராட்டத்தில் பங்கு பற்ற வேண்டும். ஏகாதிபத்தியத்திற்கும் சுதேச முதலாளித்துவ பிற்போக்கிற்கும் எதிராக பலதரப்பட்ட உணர்வு நிலையிலுள்ள பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஒரு போராட்டத்தில் ஈடுபடுத்தி புரட்சிகர சோஷலிசவாதிகள் தலைமை தாங்கி நிற்கின்றனர். சிங்கள வகுப்புவாதத்தின் இருப்பிடம் ஏகாதிபத்திய பிற்போக்கு முகாம் என்பது அடிப்படை உண்மையாதலால், இன்று போராடும் சக்திகள் இதே நேரத்தில் உங்களின் எதிரிக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

தமிழ் மக்களிடையேயும் சிங்கள மக்களிடையேயும் உள்ள முற்போக்கு சனநாயக, சோஷலிச, புரட்சிகர சக்திகளின் அசைக்க முடியாத, அழிக்க முடியாத ஐக்கியத்தை உருவாக்குவதற்கு பொது எதிரியை எதிர்க்கும் இந்த போராட்டத்தைப் பொதுப் போராட்டமாக்குவோம். எத்தனையோ இடர்களின் ஊடாக, உங்களின் வெற்றிக்கான கூட்டணி இதுவேயாகும். தேயிலை, றப்பர், தென்னந் தோட்டங்களிலும் கைத்தொழில் நிதித் துறைகளிலும் உள்ள தமது முதலீடுகள் மொழியுரிமைக்காகவும் பிரஜாவுரிமைக்காகவும் நடாத்தப்படும் போராட்டத்திலும் பார்க்க முக்கியமானது எனக் கருதும் தமிழர்கள் யூ. என். பி. யுடனும் அதனுடைய சகாக்களுடனும் நிற்கட்டும்! ஆனல் சனநாயக உரிமைகளுக்கான போராட்டம் முக்கியமானது எனக் கருதும் தமிழ் பேசும் மக்களுக்கு நாம் கூறுகிறோம்: உங்கடைய இடம் எங்களுடைய முகாமிலாகும் — முன்னேற்றத்திற்கும் சோஷலிசத்திற்குமான முகாமாகும். யூ. என். பி. ஐக்கிய முன்னணி என்ற அடிப்படையில் ஏற்பட்டுள்ள தேசியப் பிரிவைப்போல தமிழர்களிடையேயும் பிரிவு ஏற்படுவது சன நாயக உரிமைகளுக்கான தமிழரின் போராட்டத்தை ஒரு படி முன்னேறச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச பத்திரிகைகள் இந்நூலைப் பற்றிக் கூறியவை: கல்கத்தா

## The Statesman

CALCUTTA SUNDAY MAY 10 1964

## BOOK REVIEWS

### ASIA

**Krishna Menon** By T J S George (Cape, 35s.)

**The Devil's Discus.** By **Rayne** Kruger (Cassell, 30s.)

**Communist Strategies in Asia.** Edited by A. Doak **Barnett** (Pall Mall, 45s.)

**The Way Out for the Tamil Speaking People** By V Karalasingham (Young Socialist, Colombo, Re 1.)

To one like Mr Karalasingham, adept in Marxist dialectic, the theoretical interpretation and understanding of a problem is more than half its solution. His predictable analysis holds any acknowledgment of the difference of interests between the Sinhalese and the Tamils in Ceylon to be racial division deliberately created and exploited by Capitalist rule for its perpetuation over the working masses. The comrade warns the Ceylonese Tamil minority that its support of other political parties spells its doom and its only hope lies in joining the leftist alliance.

M SPORTS NEWS YESTERDAY'S RESULTS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிஸ் பிரான்சிய மொழியில்

FEVRIER
1964

2

AFRIQUE 0,50 F
EUROPE 1,00 F

sous
le
drapeau
du

# SOCIALISME

prolétaires de tous les pays unissez vous

REVUE MENSUELLE DE LA COMMISSION AFRICAINE DE LA IVe INTERNATIONALE

## LES LIVRES

### " THE WAY OUT FOR THE TAMIL SPEAKING PEOPLE "

par V. Karalasingham

*L'oppression raciale de la minorité Tamil est analysée comme résultant de la domination impérialiste et capitaliste. Elle subsistera aussi longtemps que durera le régime bourgeois. Pour cette raison les travailleurs agricoles des plantations de Ceylan, qui constituent la minorité Tamil, n'ont d'autre solution à leurs problèmes que la Révolution Socialiste.*

*A son tour, comme le camarade Karalasingham le souligne à juste titre, le parti marxiste révolutionnaire a le devoir d'être le défenseur le plus loyal et le plus efficace de la minorité Tamil à Ceylan.*

*Voici une brochure qui intéressera tous les révolutionnaires africains car son sujet est la lutte contre le racisme. Dans le cas concret contre le racisme anti-Tamil à Ceylan, fomenté par l'impérialisme britannique et par la bourgeoisie cingalaise, pour diviser et exploiter plus facilement les masses, comme il en a toujours été.*

*La position de l'auteur est celle de son parti, le Lanka Sama Samaja Party, section ceylanaise de la Quatrième Internationale.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் நேரடியாகப் பங்குபற்றுவதன் மூலம், உங்களுடைய உண்மையான ஆதரவாளர்களையும், கூட்டாளிகளையும் உற்சாக முட்டுவீர்கள்; மேலும் உங்களுடைய இன்றைய தலைமை வகித்த பிற்போக்கு நிலை காரணமாக பெரும்பாலும் இவ்வளவு காலமும் வேண்டா வெறுப்பாக அல்லது எதிரிடையாக இந்த முகாமலிருந்த ஆட்களின் அனுதாபத்தையும் அக்கறையையும் பெறுவீர்கள். ஏராளமான சாத்தியக் கூறுகளைக் கொண்ட ஒரு புதிய உலகம் உங்கள் முன்னிலையில் உடனடியாகத் தோன்றுகின்றது! ஏகாதிபத்திய எதிர்ப்பு முகாமில் நீங்கள் முற்றுகவும் பூரணமாகவும் பங்குபற்றி முழு மூச்சாக முயற்சி செய்தால் இந்த முகாமில் புதிய சக்தி கிளம்பும்; காலப்போக்கில் இந்த முகாம் உங்களின் விசேட கோரிக்கைகளை தனது கொடியில் பொறிக்க வேண்டி நேரிடும்: நீங்கள் இதய பூர்வமாக பங்குபற்றுதல் அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பதற்கான உத்தரவாதமாகும். ஆனல் இவை எல்லாம் எதிர்கால நிகழ்ச்சியாகும். புரட்சிகள் ஆக்கப்படும் மனித முன்னேற்றத்திற்கான சமூகத்தின் பாதை துப்பரவு செய்யப்படும், அதாவது, வரலாறு உருவாக்கப்படும் அணிகளில் நீங்கள் சேர்ந்தபின்பு நடைபெறுபவையாகும்.

நிகழ் காலத்தில் இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டியது யாது? தமிழ்க் காங்கிரஸ், சமஷ்டிக் கட்சி ஆகியவற்றின் தலைமையில் உங்கள் தலைவிதியாக இருந்த போலிப் போராட்டத்தையும் கேலிக் கூத்தையும் கைவிட்டு ஒரு கருத்துள்ள போராட்டத்தில் ஈடுபட நீங்கள் உறுதி பூண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் எடுத்துக்காட்ட வேண்டும். உடுவில் தொகுதியில் என்னைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் இதைச் செய்ய முடியும். ஐக்கிய முன்னணி தொழிற் சங்கங்கள், விவசாயிகள் சங்கங்கள், வாலிபர் நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், மாணவர் மற்றும் மக்கள் இயக்கங்கள் ஆகியவற்றில் இலங்கையின் எல்லாப் பாகங்களிலுமுள்ள நண்பர்களும் சகாக்களும் இதைத்தான் கோருகின்றனர்.

இவ் விண்ணப்பத்தை முடிப்பதற்கு முன்பு சொந்த முறையில் ஒரு விடயத்தை கூற விரும்புகிறேன். நான் யாழ்ப்பாணத்தில் பிறந்து யாழ்ப்பாணத்தை பின்னணியாகக் கொண்டவனுக இருப்பதுடன் இலங்கை சமசமாஜக் கட்சியின் தலை

மையில் அமைவாகி இருக்கும் புரட்சிகர சிங்களத் தொழிலாளர்கள், விவசாயிகள், படித்த சோஷலிச வாதிகள் ஆகியோரைக் கொண்ட இயக்கத்துடன் நீண்ட காலமாகவும் நெருக்கமாகவும் தொடர்புடையவனாக இருப்பது எனக்கு ஒரு தனி நிலையை அளிக்கின்றது. வட மகாணத்தில் போட்டியிடும் எந்த அபேட்சகருக்கும் இந்நிலை கிட்டவில்லை. அந்த வரலாற்று முக்கியத்துவம் உடைய புரட்சி இயக்கத்திற்கு உங்களைச் சேர்ப்பதற்கான இயற்கைப் பாலமாக நான் அமைந்துள்ளேன். இந்த இயக்கம் உங்களினதும் உண்மையில் மனிதனதும் விடுதலைக்கான இயக்கமாகும். இப்பொழுது உங்கள் முன்னிலையில் பிரச்சினை நியாயமாகவும் தெளிவாகவும் முன் வைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது உங்கள் முன்னிலையிலுள்ள சந்தர்ப்பத்தை ஏற்பதா அல்லது விடுவதா.

*" சீதாகிரி "*
*சங்கரப்பிள்ளை வீதி,*
*மானிப்பாய்.*
*5—5—70.*

*உங்கள் உண்மையுள்ள*

**வை. காராளசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வை. காராளசிங்கம்

## உடுவில் தொகுதி

## இலங்கை சமசமாஜக் கட்சி அபேட்சகர்



ஸ்ரீ பார்வதி அச்சகம், யாழ்ப்பாணம். (போன்: 689)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org